4. கவன ஈர்ப்புகள்.

(அ) குடிநீரில் கழிவுநீர் கலப்பதால் அடையாறு பகுதியில் வாழும் மக்கள் பாதிக்கப்பெற்றுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, "சென்னை அடையாறு பகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலப்பதாகவும், அதில் உள்ள விஷக் கிருமிகளால் அப்பகுதியில் வாழும் மக்கள் பெரும் பகுதியினர் பாதிக்கப்பட்டு வருவதாகவும், சென்னை கிங் இன்ஸ்ட்டியூட்டின் நீர் ஆய்வு பிரிவு ஆராய்ந்து முடிவுகளை வெளியிட்டுள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்து" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைமுன் கீழ்க் கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை அடையாறு பகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலப்பதால் அதில் உள்ள விஷக்கிருமிகளால் அப்பகுதியில் வாழும் மக்கள் பெரும்பகுதியினர் பாதிக்கப்பட்டு வருவதாக சென்னை கிங் இன்ஸ்ட்டிட்யூட்டிடமிருந்து அரசுக்கோ அல்லது சென்னை பெருநகர் குடிநீர் கழிவு நீரகற்றல் வாரியத்திற்கோ சமீபத்தில் நேரடியாக எந்தவித தகவலும் அனுப்பப்படவில்லை. ஆனால், தமிழ்நாடு அரசின் கிங் நிலையத்தின் தலைமை நீர் பரிசோதகர் மூன்று மாதத்திற்கொருமுறை 50 முதல் 60 இடங்களில் நீரினை சோதனை செய்கிறார். இச் சோதனையின்மேல் நீரின் தரம் குறைந்து இருக்கக்கூடிய இடங்களில் சென்னைக் குடிநீர் வாரிய குடிநீர் வழங்கும் அதிகாரிகள் உடனேயே கவனித்து குளோரினை தக்கப்படி அதிகமாக்கி தரத்தினை பாதுகாக்கிறார்கள். இதனால் குடிநீரின் தன்மை பாதுகாக்கப்படுகிறது. தற்பொழுது எழுப்பியுள்ள பிரச்சினை ஒரு வேளை 'இந்தியன் ஜர்னல் என்விரான்மென்டல் ஹெல்த்' என்ற செய்தி இதழில் சென்னை கிங் இன்ஸ்ட்டிட்யூட்டைச் சேர்ந்த கே. எம். வீரண்ணன் என்பவர் எழுதிய ஆராய்ச்சி கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு, டெல்லியிலிருந்து வெளியான இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் 11—2-82 அன்று பிரசுரிக்கப்பட்ட செய்தியை தழுவியதாக இருக்குமானால் கீழ்க்கண்ட விளக்கம் அளிப்பது அவசியமாகும்.

கிங் இன்ஸ்ட்டிட்யூட்டைச் சேர்ந்த திரு. கே. எம். வீரண்ணன் என்பவர் நேரில் அறிந்த செய்திப்படி, இக்கட்டுரையில் கொடுத்துள்ள விவரங்கள் 1981-ம் ஆண்டு ஜனவரி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிப்ரவரி, மார்ச் மாதங்களில் சேகரிக்கப்பட்டவை. சென்னை அடையாறு ஆற்றங்கரையிலுள்ள அருளாயம்பேட்டை, ஜோதி அம்மாள் நகர், நெருப்பு மேடு, செட்டி தோட்டம் முதலிய குடிசைப்பகுதிகளில் இக்கட்டுரையில் விவரித்துள்ள ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இக்கட்டுரையில் மேலே கூறப்பட்ட குடிசைப்பகுதிகளில வாழும் மக்களின் உடல்நிலையை பரிசோதித்து அவர்களுடைய கழிவுகளை பரிசோதனை செய்து அவர்கள் வயிற்றிலுள்ள பூச்சிகளைப் பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டன. இந்த மக்களின் வாழ்க்கைத் தரம், உணவு, பொது சுகாதாரம் முதலியவற்றிற்கும் அவர்களுடைய உடல் நலத்திற்கும் உள்ள சம்பந்தங்கள் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

இக் கட்டுரையில் கூறப்பட்டுள்ள ஆராய்ச்சியில்—

1. அடையாறு ஆற்றங்கரையில் அதுவும் ஒரு பகுதியிலுள்ள குடிசை வாழ் மக்களின் உடல்நிலை மட்டுமே ஆராயப்பட்டது.

2. இந்த ஆராய்ச்சியில் கூறப்பட்டுள்ள மக்களின் ஒத்துழைப்புடனே அவர்களின் மலத்தினை பரிசோதனை செய்யப்பட்டது. ஆகவே, இந்த குடிசைப் பகுதிகளிலும் ஒத்துழைப்பு தந்த மக்களின் உடல் நிலைபற்றி மட்டுமே முடிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆராய்ச்சியின் முடிவாக இந்த மக்களுக்கு குடியிருக்க வசதியும் சுற்றுப்புற சுகாதாரமும் மேம்படுத்தப்பட்டு, கழிவுப் பொருள்கள் சுகாதார முறையில் வெளியேற்றப்பட்டு, அதே சமயம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டால் இவர்களின் உடலில் வாழும் பூச்சிகளின் எண்ணிக்கையும் குறைக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

குடி தண்ணீரைப் பொறுத்தவரை சென்னை குடிநீர் வாரியம் நகருக்கு வழங்கப்படும் குடிநீரை கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையம், தண்டையார்பேட்டையிலுள்ள அண்ணா பூங்கா நீரேற்றும் நிலையம், தியாகராய நகரில் குடிநீர் ஏற்றம் நிலையம் இவற்றில் குளோரின் வாயுவினை கட்டுப்படுத்தி தேவைக்கேற்ப குடிநீரில் கலந்து குளோரின் வாயுவு அளவு 1 மில்லியன் பகுதிக்கு 1 முதல் 1.5 பகுதி வரை இருக்கும்படி விநியோகிக்கப்படுகிறது. மற்றும் நகரில் பரவலாக 24 இடங்களில் ஆங்காங்கே பிளீச்சிங் பவுடரினை நீரில் கலந்து அந்த இடங்களில் குடிநீரில் செலுத்தப் படுகிறது. மற்றும் பெசண்ட் நகர், செம்பியம் போன்ற இடங்களிலுள்ள சிறு கிணறுகளிலிருந்து பெறப்படும் நீரிலும் குளோரின் செலுத்தப்படுகிறது. ஆதலால் பொதுவாக குடிநீர் விநியோகிக்கும் குழாய்களில் பரவலாக குளோரின் மேற்கூறிய எல்லா இடங்களிலும் செலுத்தப்படுகிறது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 மார்ச் 1

நகருக்கு விநியோகிக்கப்படும் குடிநீரில் குளோரின் அளவு சரியாக உள்ளதா என்பதைனையும், நுண்கிருமிகள் இருக்கின்றனவா என்பதனையும் பரிசோதிக்க நகரின் குடிநீர் வழங்கும் பகுதிகளை 12 உட்பகுதிகளாகப் பிரித்து ஒரு நாளைக்கு ஒரு பகுதி என்கிற முறையில் தினமும் ஒவ்வொரு பகுதியாக பரிசோதிக்கப்படுகிறது. அவ்வாறு பரிசோதிக்கும்போது குடிநீரின் தன்மை பாதிக்கப்பட்டிருக்கிற இடங்களில் உடனே குடிநீர் விநியோகிக்கும் மேற்பார்வை செய்யும் பொறியாளர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டு அதற்காக அவர்கள் நிவாரண பணிகளை செய்யுமாறு கோரப்படுகிறது. அவ்வாறு, பாதிக்கப்பட்ட இடங்களை மறுபடியும் பரிசோதித்து குடிநீரின் தரம் சரியாக இருக்கிறதா என்பதும் சரிபார்க்கப்படுகிறது.

இவ்வாறு சென்னை நகருக்கு வழங்கும் குடிநீரில், குடிநீரினை கூட்டு மொத்தமாக விநியோகிக்கும் முக்கிய 3 இடங்களிலும் மற்றும் 24 இடங்களிலும் குளோரின் செலுத்தப்பட்டு தினமும் நகரில் ஒவ் வாரு பகுதியிலும் குடிநீரில் குளோரின் அளவு சரியாக இருக்கிறதா என்பதனை பரிசோதித்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

குழாய் நீர் மழை காலங்களில் கழிவு நீருடன் கலப்பதால் இந்த நோய்கள் பரவலாம் என்று கூறப்பட்டுள்ளது. சென்னை நகரில் சில இடங்களில் போதுமான அழுத்தம் இல்லாததால் தெருக்குழாய்கள் பள்ளங்களில் வைக்கப்பட்டுள்ளது உண்மையே. ஆனால், சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் அவற்றை சாலை மட்டத்தைவிட உயரமாக மாற்றியமைத்துக் கைபம்புகளைப் பொருத்தி வருகிறது. இதுவரை சுமார் 1,038 அடிமட்ட குழாய்களில் 537 குழாய்கள் உயர்த்தப்பட்டன. மீதியுள்ள இடங்களில் இப்பணி தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஆராய்ச்சியில் உட்பட்ட அருளாயம்பேட்டை, ஜோதி அம்மாள் நகர், நெருப்பு மேடு, ஜோதி தோட்டம், செட்டி தோட்டம் என்ற பகுதிகளில் பள்ளத்தில் பொதுக்குழாய் ஒன்றும் கிடையாது. எல்லா பொது குழாய்களும் தரை மட்டத்திற்குமேல் வைக்கப்பட்டு கைபம்புகள் பொருத்தப்பட்டு உள்ளன. ஆகையால் இந்த பகுதிகளில் உள்ள மக்களுக்கு புழு, பூச்சிகளால் ஏற்பட்ட நோய்கள் குடி தண்ணீரால் விளைவிக்கப்பட்டன அல்ல என்று கூறலாம்.

இந்த நோய்கள் கழிப்பு அறைகள் தவிர மற்ற இடங்களில் மல ஜலம் கழிப்பதாலும், சரியாக வேக வைக்கப்படாத மாமிசத்தை உண்பதாலும், விளையக்கூடுமென்று மருத்துவ சான்றுகள் கூறுகின்றன.

திரு. இரே. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, சென்னை கிங் இன்ஸ்டிட்யூட்டைச் சேர்ந்த திரு. கே. எம். **வீரண்ணன் என்பவர் ஆராய்ந்து எழுதிய அந்தக் கட்டுரையில் உள்ள விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.**

1982 மார்ச் 1] [திரு இரெ. இராசமாணிக்கம்]

அதில் 1981ஆம் ஆண்டு ஜனவரி பிப்ரவரி, மார்ச் மாதங்களில் சேகரிக்கப்பட்டவை என்று இருக்கிறது. மேலும் அதில் சென்னை, அடையாறு ஆற்றங்கரையிலுள்ள அருளாயம்பேட்டை, ஜோதி அம்மாள் நகர், நெருப்பு மேடு, செட்டி தோட்டம் முதலிய குடிசைப்பகுதிகளில் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் கொடுத்துள்ள அந்த அறிக்கையில் 371 பேர்களிடம் சோதனை செய்ததில் 201 நபர்கள் மிகவும் மோசமான சுற்றுப்புறச் சூழ்நிலையில் வசித்து வருகிறார்கள் என்றும், 82 பேர்களுடைய உடல்நிலை மிகவும் பலகீனமாகக் காணப்படுவதாகவும் சீதபேதி, இரத்த சோகை போன்ற பயங்கரமான வியாதிகள் வருவதற்கான அறிகுறிகள் இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வியாதிகள் வருவதற்கான காரணம், குடிதண்ணீரில் கழிவுநீர் கலக்கப்படுகிறது என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மாநிலத்தினுடைய தலைநகரமாக இருக்கின்ற சென்னையில் இப்படிப்பட்ட பயங்கரமான, மோசமான சூழ்நிலையில் குடிசைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கும்பொழுது உள்ளபடியே நான் வேதனைப்படுகிறேன். அந்தப் பகுதிகளிலே வாழும் மக்கள் சுகாதார வசதிகளோடும், நல்ல உடல் நலத்துடனும் வாழ இந்த அரசு உடன் மீண்டும் அந்த நீரை ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு, இதுவரையில் எடுத்த நடவடிக்கை என்ன என்பதையும் அறிவிக்க இயலுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிதண்ணீரால் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லக் கூடிய எந்த வியாதியும் ஏற்படவில்லை என்பதுதான் இந்த அறிக்கையிலே இருக்கும் ஒரு சாராம்சம் ஆகும். அவர் செய்த ஆராய்ச்சியில் உட்பட்ட அருளாயம்பேட்டை ஜோதி அம்மாள் நகர், நெருப்பு மேடு, செட்டி தோட்டம் என்ற பகுதிகளில் பள்ளத்தில் பொதுக் குழாய்கள் ஒன்றும் கிடையாது. ஒருக்கால் பள்ளத்தில் பொதுக் குழாய்கள் இருந்தால் வேறு தண்ணீர் கலப்பதற்கான வழி உண்டு. அப்படியிருந்தால் அவற்றை சாலை மட்டத்தைவிட உயரமாக மாற்றியமைத்துக் கைபம்புகளைப் பொருத்தி வருகிறது. இதுவரை சுமார் 1,038 அடிமட்ட குழாய்களில் 537 குழாய்கள் உயர்த்தப்பட்டன. மீதியுள்ள இடங்களில் இப்பணி தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும் இடங்களில் அப்படிப்பட்ட குழாய்கள் கிடையாது. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு புழு, பூச்சிகளால் ஏற்பட்ட நோய்கள் குடிதண்ணீரால் விளைவிக்கப்பட்டவை அல்ல என்று கூறலாம்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 மார்ச் 1

இந்த நோய்கள் கழிப்பு அறைகள் தவிர மற்ற இடங்களில் மல ஜலம் கழிப்பதாலும், சரியாக வேக வைக்கப்படாத மாமிசத்தை உண்பதாலும், விளையக் கூடுமென்று மருத்துவச் சான்றுகள் கூறுகின்றன.

ஆகவே, குடிதண்ணீரும், கழிவு நீரும் கலக்கவில்லை; கலக்க வாய்ப்பு இல்லை; அப்படிப்பட்ட தண்ணீரை அந்த மக்கள் குடிக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரே. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் குழாய் நீரை மழை காலங்களில் கழிவு நீருடன் கலப்பதால் இந்த நோய்கள் பரவலாம் என்று கூறப்பட்டுள்ளது என்று இருக்கிறது. இந்த அறிக்கையிலேயே மேலும் சொல்லப்பட்டிருக்கிறது, சென்னை நகரில் சில இடங்களில் போதுமான அழுத்தம் இல்லாததால் தெருக்குழாய்கள் பள்ளங்களில் வைக்கப்பட்டுள்ளது. உண்மையே என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் அவற்றை சாலை மட்டத்தைவிட உயரமாக மாற்றியமைத்துக் கைபம்புகளைப் பொருத்தி வருகிறது என்றும், இதுவரை சுமார் 1,038 அடிமட்ட குழாய்களில் 537 குழாய்கள் உயர்த்தப்பட்டன என்றும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள குழாய்கள் எவ்வளவு சீக்கிரத்தில் மேல் மட்டத்தில் பொருத்தப்படும் என்பதை அறிவிப்பதோடு, இப்படிப்பட்ட பகுதிகளில் மல அறைகள் இல்லாத இடங்களில் பொது இடங்களில் மலஜலம் கழிப்பதாலும் இப்படிப்பட்ட நோய்கள் வருவதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. சென்னை மாநகரத்திலே உள்ள குடிசைப் பகுதிகளில் வாழ்பவர்களுக்குச் சுகாதார வசதியோடு உள்ள கழிப்பறைகளைக் கட்ட இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பள்ளத்தில் இருக்கும் குழாய்களில் இப்படித் தண்ணீர் கலப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அப்படி இருப்பவைகளை உயர்த்திக் கொண்டு வருகிறது என்று சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன பகுதிகளில் இப்படிப்பட்ட பள்ளங்களில் பொதுக் குழாய்கள் கிடையாது. ஆகவே, அங்கே தண்ணீரால் யாருக்கும் எந்தக் கேடும் வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் இதனால் இருக்கக் கூடும் என்று ''Tha is pre ump ion' Tha is 'anumanam'' என்பது இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. குடிநீரில் கழிவு நீர் கலக்கவில்லை; அப்படிக் கலந்த தண்ணீரைக் குடித்ததால் யாருக்கும் வியாதி வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.